# சுற்றுச்சூழல் கல்வி :- அலகு-1

**பொருள் :-**

சுற்றுச்சூழல் கல்வி என்பதன் பொருள் நமது “சுற்றுப்புறம்” அதாவது தாவரங்கள், பிராணிகள், மற்றும் மனிதவளர்ச்சியின் மீது தாக்கம் செலுத்துகின்ற அனைத்து புற நிலைகள் வாழ்வதற்கும், பணியாற்றிடவும், கிடைத்திடும் சுற்றுப்புற நிலைமை போன்றவற்றை உள்ளடக்கி உள்ளது.

சுற்று சூழல் என்பது குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட காலத்தில் மனிதனை சுற்றி உள்ள ஒட்டு மொத்த நிலைமையாகும் .

ஒரு பொருளைச் சுற்றிஉள்ள அதன் மீது தாக்கத்தைச்செலுத்துகின்ற அனைத்துமாகும் .- **கிஸ்பர்ட்**

சுற்றுசூழல் என்பது நம் மீது தாக்கம் செலுத்துகின்ற புற விசைகள் ஆகும். - **ராஸ்**

ஒருவனது ஜீன்களைத் தவற ஏனைய மற்ற வைகள் பற்றி குறிப்பது தான் சுற்றுசூழல் எனலாம்.

**சுற்றுசூழல் கல்வியின் தேவை :-**

சுற்றுசூழல் மாசுபடுதல் என்பது எதோ ஒரு வடிவில் ஒவ்வொரு தேசத்தையும் பாதிக்கிறது. ஆனால் அதனால் விளையும் பிரச்சினைகளும், மனித வளர்ச்சிக்காக மேற்கொள்ளப்படும் வளர்ச்சி குறித்த பிரச்சனைகளும் வெவ்வேறு ஆனவை.

சுற்றுசூழல், அழுத்தம் , மனித வாழ்க்கையில் வெளிப்படையாக உணரக்கூடிய பாதிப்புகளையும், அதற்கு எதிர்ப்பு தெரிவித்தலையும் உண்டாக்கலாம். அத்தகைய வெளிப்படையான பாதிப்புகளையும்,

உண்டாக்காமலும் இருக்கலாம். ஆனால் சுற்றுசூழல் நெருக்கடியின் காரணமாக அனைத்து உயிரினத் தொகுதிகளையும், உள்ளடக்கிய உயிரி மண்டலத்தில் பாதிப்பு , எதோ ஒரு வகையில் ஏற்படுவது உறுதி.

அமில மழை, பாலை வனமாதல், புவி வெப்ப உயர்வு , ஓசோன் படல அழிவு, காற்று, நீர், மண் ஆகியவை மாசுபடுதல், பெரிய புவிபரப்பு கதிர் வீச்சால் கேடுறுதல், சில உயிரின தொகுதிகள் முற்றிலும் அழிந்து போதல் போன்றவை, தற்போதும், வருங்காலத்திலும் கவனிக்க வேண்டிய சுற்றுசூழல் அச்சுறுத்தல்கள்.

1. குறிப்பிட்ட கல்வி நடவடிக்கைகளின் நோக்கங்கள், கருத்துக்கள், மற்றும் உட்கூறுகள்.
2. சுற்றுச் சூழல் நெருக்கடிகள், சுற்றுச் சூழல் கல்வி ஆகியவற்றிற்கு இடையேயான தொடர்பு.
3. கருப்பொருள்களும், செயல்படும் மாந்தர்களும், ஆசிரியர்களும் , மாணவர்களும் மற்றும் அவர்களின் தகுதிகள்.
4. இலக்காக அமையும் குழுக்கள்.
5. உள்ளூர் சூழ்நிலை, கல்வி நிலையங்கள்
6. சுற்றுசூழல்கல்வி என்பது தெளிவாக வரையறுக்கப்பட்ட பன்முகங் கொண்ட ஒரே ஒரு நோக்கத்தை உடையது.

சுற்றுசூழல் நெருக்கடியை சமாளிப்பதற்காக கல்விச்செயல்கள், சுற்றுசூழல் கற்றல் என்பது சுற்றுசூழல் சீரழிவிற்கான காரணிகள், தீர்வுகள் ஆகியவற்றைக் கற்றல் ஆகும்.

சுற்றுசூழல் பற்றி கற்றல் என்பது இயற்கை வளங்களை நிர்வகிப்பதில் எதிர்ப்படும் பிரச்சினைகளுக்கான உடனடி நிவாரண நடவடிக்கையாகும்.

இன்றைய கல்வி முறையில் சுற்றுசூழல் கல்வி ஒரு முக்கிய பிரிவு ஆகும். சில நாடுகள் இது அரசியல் மற்றும் கற்பித்தலை மையமாக கொண்ட செயல் திட்டமாக உருவாக்கப்பட்டு சமுதாயக் குழுக்கள், அரசு, அறிவியல், சமுதாயம் , ஆகியவற்றால் தொடர்ந்து கடைபிடிக்கும் வகையில் அமைந்து உள்ளது.

**சுற்றுசூழல் கல்வியின் முக்கியத்துவம்:**

- குழந்தை மற்றும் வயது வந்தோரின் சுய தேவை பூர்த்தி மற்றும் சமூக வளர்ச்சிக்கு மிகவும் அவசியமாகும்.
- இயற்கைச் சூழ்நிலையின் சமநிலை மற்றும் பல்வகை உணவு சங்கிலிகளைப் புரிந்து கொள்ள சுற்றுசூழல் கல்வி மிகவும் அவசியமாகும்.
- உயிர் வாழ்தலுக்கும், பொருள்சார் பண்பாட்டுக் கூறினை வளர்ப்பதற்கும்,சுற்றுசூழல் அனைத்து வழிகளிலும் பயன்படுகிறது என்பதனைப் புரிந்து கொண்டு செயல்பட முக்கிய பங்கு ஆற்றுகிறது.
- இது இயற்கையையும், சமுதாயத்தையும் போற்றவும், மகிழ்வுற வாழ்ந்திடவும், உதவுகிறது.
- மனித இனத்தின் நீண்ட கால மற்றும் உடனடி நலனுக்குத் தேவையான சுற்றுசூழல் மாற்றங்கள் அக்கறை கொள்ள வைக்கிறது.
- மக்கள் தொகைப் பெருக்கம், இயற்கை வளங்கள் குறைவு ஏற்படுதல், புவி வெப்ப உயர்வு போன்ற பல பிரச்சினைகளை கவனம் செலுத்த வைக்கிறது.
- இயற்கை வளங்கள் அதிகமாக பயன்பாடு.
- உலக அளவில் தண்ணீர் தட்டுப்பாடு, காடுகளை அழித்தல், கடற்கரைப் பரப்புகளின் அழிவு, மண் அரிப்பு, போன்றவை நம் கவனத்தை ஈர்க்கின்ற சில முக்கிய பிரச்சினைகளாகும்.

- நீடித்த நிலையான வளர்ச்சி - அதாவது இயற்கை வளங்களுக்கு ஊறு விளை விக்காமல் பொருளாதார முன்னேற்றத்திக்கு வழிவகை செய்தல்.

**சுற்றுசூழல் கல்வியின் பண்புகள்:**

மனப்பான்மை மற்றும் மதிப்புகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவது. மனிதன் தன் இயற்கையான மற்றும் தன்னால் உருவாக்கப்பட்ட சுற்றுசூழலோடு தொடர்பு கொண்டு மக்கட் தொகை மாசுபடுதல், வளங்களின் பங்கீடு, போக்குவரத்து, தொழில் நுட்பம், நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறத் திட்டமிடுதல் போன்றவற்றை உள்ளடக்கியது.

பல தரப்பட்ட கற்றல் சூழ்நிலைகளையும், கற்பித்தல் அணுகுமுறைகளையும் கொண்டது .

சுற்றுசூழல் பிரச்சினைகளை அலசி ஆராய்ந்து தீர்வு காணும் திறன் வளர்க்கும் நோக்கு உடையது.

வாழ்நாள் முழுவதும் நீடிக்கும் கல்வி செயல்முறை.

பல்துறை பாட அணுகுமுறைகளையும் கொண்டது.

சுற்றுசூழல் தொடர்பான பிரச்சினைகளின் அறிகுறிகள், உண்மைக் காரணங்கள் ஆகியவற்றை அறிந்திடும் ஆற்றலை வளர்த்திட வேண்டும்.

**சுற்றுசூழல் கல்வியின் நோக்கங்கள்:**

பல அரசு மற்றும் அரசு சாரா அமைப்புகள் சுற்றுசூழல் கல்வியை மக்களுக்கு அளிக்கவும், விழிப்பு உணர்வு உண்டாக்கவும் பாடு படுகின்றன.

சுற்றுசூழல் கல்வியின் பாட க்கருத்துக்கள் முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறை சாரா கல்விக்கு தகுந்த நிலையில் அமைக்கப்பட்டு உள்ளன.

1982 ல் சுற்றுசூழல் செய்தித் துறை என்னும் ஒரு பிரிவு தோற்றுவிக்கப்பட்டது.

1977 ல் பிலிஸி என்ற இடத்தில் நடைபெற்ற யுனெஸ்கோ அனைத்துலக மாநாடு மூலம் முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறை சாரா கல்வி நோக்கம் உருவாக்கப்பட்டது.

1.சுற்றுசூழல் விழிப்பு உணர்வு மற்றும் அறிவு - தொடக்கநிலை கல்வி

2. வாழ்க்கைச் சூழ்நிலை மற்றும் சுற்றுசூழலுக்கு ஏற்பட புரிந்து கொள்ளுதல்-இடைநிலைக்கல்வி

3. சுற்றுசூழலின் இயற்கை வளங்களைப் பாதுகாத்தல் மற்றும் திறன்கள் - மேல்நிலைக்கல்வி

4. சுற்றுசூழல் பிரச்சினை தீர்ப்பதன் மூலம் நீடித்த நிலையான வளர்ச்சியை உருவாக்குதல் -கல்லூரி மற்றும் பல்கலைக் கழக கல்வி.

5. குறிப்பிட்ட கல்வி நடவடிக்கைகளின் நோக்கங் கள், கருத்துக்கள் , உள்கூறுகள்.

6. சுற்றுசூழல் நெருக்கடிகள், சுற்றுசூழல் கல்வி ஆகியவை இடையே யான தொடர்பு.

7. கருப்பொருள்களும், ஆசிரியர், மாணவர் மற்றும் அவர்களின் தகுதிகள்.

8. இலக்காக அமையும் குழுக்கள், உள்ளூர் சூழ்நிலை, கல்வி நிலையங்கள், நிலைமைகள் அடைய வழிகள்.

**சுற்றுசூழல் கல்வியின் வரம்புகள்:**

1. விழிப்புணர்வு

2. உண்மை வாழ்க்கை சூழ்நிலைகள்

3. பேணிப்பாதுகாத்தல்

4. நீடித்த நிலையான வளர்ச்சி

5. சுற்றுசூழல் கல்வி இயற்கை மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்டது.

6. தொழில் நுட்ப சமூக அம்சங்கள் இணைந்த முழுமையான நிலையில் கருதப்பட வேண்டும்.

7. முறைப்படுத்தப்பட்ட மற்றும் முறை சாரா வழியிலும், கல்வியின் அனைத்து நிலைகளில், அதாவது முன்பள்ளிப் பருவத்தில் தொடங்கி வாழ்க்கை முழுவதும் தொடர்ச்சியாக நடைபெறுவதாக இருத்தல் வேண்டும்.

8.சுற்றுசூழல் பிரச்சினைகளைத் தடுப்பதற்கும், தீர்வு காண்பதற்கும் அனைத்து நாடுகளின் ஒத்துழைப்பை வளர்க்க வேண்டும் .

கற்போர், தங்கள்  கற்றல் அனுபவங்களை தீட்டமிடுதலில் முக்கிய பங்கு வகிக்க உதவ வேண்டும்.